TNPD010015432023

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Aadi Thingal 15th day

Friday the 31st day of July 2026

Calender Case No.79/2023
CNR No.TNPD01-001543-2023

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | NIB-CID Ramnad P.S. in Cr.No.11/2022 u/s 8(c) r/w 20(b)(ii)(B), 29(1), 25 of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | 1) Kannan<br>2) Muthumurugan |
| 4. | Father's Name /Husband Name | 1) Rajendran<br>2) Muniyasamy |
| 5. | Occupation | 1) Coolie<br>2) Coolie |
| 6. | Residence | 1) 1/1017, Omsakthi Nagar, 5 Street, Ramanathapuram.<br>2) 1/310-A, M.S.K Nagar, Ramanathapuram. |
| 7. | Age | 1) 45<br>2) 30 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 27.05.2022 |
| 9. | Complaint | 27.05.2022 |

| | | |
|---|---|---|
| 10. | Apprehension | 1) 27.05.2022<br>2) 27.05.2022 |
| 11. | Release on bail | 1) 23.06.2022<br>2) 23.06.2022 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 12.03.2026 |
| 14. | closure of trial | 22.07.2026 |
| 15. | Sentence or order | 31.07.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 31.07.2026 |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **<u>Chief</u>** **<u>Cross</u>**<br>1) 12.03.2026 – 12.03.2026<br>2) 12.03.2026 – 12.03.2026<br>3) 17.07.2026 – 17.07.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 22.07.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 1) 27.05.2022 – 23.06.2022<br>2) 27.05.2022 – 23.06.2022 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 08.02.2023 |

இவ்வழக்கு 22.07.2026—ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பில் காவல் ஆய்வாளர் அவர்கள் முன்னிலையாகியும். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மணிகண்டன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**<u>தீர்ப்புரை</u>**

27/05/2022—ம் தேதி 15.00 மணிக்கு இராமநாதபுரம் D— பிளாக் பாழடைந்த கட்டிடம் அருகில் இவ்வழக்கின் 1வது எதிரி கண்ணன் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளான 2.100 கிகி கஞ்சாவையும் 2 வது எதிரி முத்து முருகன் TN 65 AL 3636 Bajaj Pulsar இருசக்கர வாகனத்தில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளான 1.200 கிகி கஞ்சாவையும் மொத்தம் 3.300 கிகி கஞ்சாவையும் சட்டவிரோதமாக வைத்திருந்ததை கைப்பற்றி பகுப்பாய்விற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரிகளாகிய நீவிர் ச—பி 8(c) r/w 20(b) (ii)(B) ,25,29(1) of NDPS Act 1985—ன்படி NIB—CID Ramnad காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிகளுக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207—ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின்

வாதங்களை கேட்டும், எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B),25,29(1) of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்ழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.16 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–</u>

(I) அசா.1 திரு.கண்ணன் தனது சாட்சியத்தில் தான் தற்போது இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு ராமநாதபுரம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்தபோது 27.05.2022–ம் தேதி 14.15 மணிக்கு தான் அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஜாக்குலின் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.1251 திரு.குமார் ஆகியோர்களுடன் காவல் ஆய்வாளருக்கு உதவியாக வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்து கொண்டு 14.30 மணிக்கு நிலையத்தை விட்டு கிளம்பி 14.50 மணிக்கு தகவலாளி சொன்ன இடமான ராமநாதபுரம் டி பிளாக் பால் அடைந்த கட்டிடம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு இருசக்கர

வாகனத்தில் வந்த நபர்களை தகவலாளி அடையாளம் காட்டி மறைய தாங்கள் அவரை பிடிக்க முயலும்போது இருசக்கரத்தை நிறுத்தி விட்டு ஓட எத்தணித்தவரை சுற்றி வளைத்து பிடித்து தாங்கள் NIB CID போலீசார் என அடையாளம் காண்பித்து அறிமுகம் செய்து கொண்டோம் என்றும், பின்பு அவரது பெயர் முகவரி கேட்க அதில் முதல் நபர் தனது பெயர் கண்ணன், ஓம் சக்தி நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும், மற்றொரு நபர் முத்து முருகன், எம்எஸ் கே நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும், தகவலாளி சொன்ன முகவரி சரியாக இருந்ததால் 15.00 மணிக்கு மேற்படி இரண்டு நபர்களிடமும் அவர்கள் கஞ்சா வைத்திருப்பதாக ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறியும் அவர்களை சோதனை செய்ய வேண்டி அது வகைக்கு அவர்களை அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிகளுக்கு உள்ள உரிமையை ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறினார் என்றும், அதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் தங்களை வேறு எங்கும் கூட்டி செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள் என்றும், அதன்படி 15.10 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரிய கருப்பனும், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 1–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், அதில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 என்றும், அதன்படி 15.30 மணிக்கு காவல் ஆய்வாளர்

திரு.கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரிய கருப்பனும், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 2–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், அதில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.2 என்றும், பின்பு 15.30 மணிக்கு திரு.கண்ணன் என்பவர் டி பிளாக் பாழ் அடைந்த கட்டிடத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளை நிற சாக்கு பையை ஆஜர் படுத்தினார் என்றும், அதில் தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதை 15.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சாவை கைப்பற்றி அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், 1–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், அந்த அத்தாட்சி அதசாஆ.3 என்றும், 2–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், அந்த அத்தாட்சி அதசாஆ.4 என்றும், எதிரியை ஆஜர்படுத்திய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு 50 கி வீதம் இரண்டு சாம்பில் எடுத்து அதில் SHO சீல் வைத்தும், மீதமுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து பின்பு 16.30 மணி முதல் 16.50 மணி வரை 1–வது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பனும், த.கா.குமாரும் கையெழுத்து

செய்தோம் என்றும், தற்போது தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது கையெழுத்து மட்டும் அதசாஆ.5 என்றும், பின்பு 17.00 மணிக்கு 2–வது எதிரியை ஆஜர் படுத்திய கஞ்சாவை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.200 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதற்கு P2 என குறியீடு செய்யப்பட்டு எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் கஞ்சாவையும் அத்தாட்சியில் கைப்பற்றி பின்பு 15.30 மணிக்கு எதிரிகளுக்கு ஆய்வு நமுனா தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன் மற்றும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், 1–வது எதிரி கண்ணனுக்கு அந்த ஆய்வு நமுனா அதசாஆ.6 என்றும், 2–வது எதிரி முத்துமுருகனுக்கு ஆய்வு செய்த அந்த ஆய்வு நமுனா அதசாஆ.7 என்றும், பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு தாங்கள் உதவியாக இருந்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா.2 திரு.பெரியகருப்பன் தனது சாட்சியத்தில் தான் தற்போது இராமநாதபுரம் NIB CID காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ராமநாதபுரம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்தபோது 27.05.2022–ம் தேதி 14.15 மணிக்கு தான் அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஜாக்குலின் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.1251 திரு.குமார் ஆகியோர்களுடன் காவல் ஆய்வாளருக்கு உதவியாக வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்து கொண்டு 14.30

மணிக்கு நிலையத்தை விட்டு கிளம்பி 14.50 மணிக்கு தகவலாளி சொன்ன இடமான ராமநாதபுரம் டி பிளாக் பால் அடைந்த கட்டிடம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை தகவலாளி அடையாளம் காட்டி மறைய நாங்கள் அவரை பிடிக்க முயலும்போது இருசக்கரத்தை நிறுத்தி விட்டு ஓட எத்தணித்தவரை சுற்றி வளைத்து பிடித்து தாங்கள் NIB – CID போலீசார் என அடையாளம் காண்பித்து அறிமுகம் செய்து கொண்டோம் என்றும், பின்பு அவரது பெயர் முகவரி கேட்க அதில் முதல் நபர் தனது பெயர் கண்ணன், ஓம் சக்தி நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும், மற்றொரு நபர் முத்து முருகன், எம்எஸ் கே நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும், தகவலாளி சொன்ன முகவரி சரியாக இருந்ததால் 15.00 மணிக்கு மேற்படி இரண்டு நபர்களிடமும் அவர்கள் கஞ்சா வைத்திருப்பதாக ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறியும் அவர்களை சோதனை செய்ய வேண்டி அது வகைக்கு அவர்களை அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிகளுக்கு உள்ள உரிமையை ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறினார் என்றும், அதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் தங்களை வேறு எங்கும் கூட்டி செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள் என்றும், அதன்படி 15.10 மணிக்கு காவல் ஆய்வாளர், கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 1–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், அதில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதன்படி 15.30 மணிக்கு காவல் ஆய்வாளர், கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு

இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 2–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், உள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பின்பு 15.30 மணிக்கு திரு.கண்ணன் என்பவர் டி பிளாக் பாழ் அடைந்த கட்டிடத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளை நிற சாக்கு பையை ஆஜர் படுத்தினார் என்றும், அதில் தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதை 15.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சாவை கைப்பற்றி அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், 1–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், 2–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், எதிரி ஆஜர்படுத்திய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு 50 கி வீதம் இரண்டு சாம்பில் எடுத்து அதில் SHO சீல் வைத்தும், மீதமுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து பின்பு 16.30 மணி முதல் 16.50 மணி வரை 1–வது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கையெழுத்து செய்தோம் என்றும், தற்போது தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1–வது கையெழுத்து மட்டும் அதசாஆ.8 என்றும், பின்பு 17.00 மணிக்கு 2–வது எதிரியை ஆஜர் படுத்திய கஞ்சாவை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.200 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதற்கு P2 என குறியீடு செய்யப்பட்டு எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் கஞ்சாவையும் அத்தாட்சியில் கைப்பற்றி பின்பு 15.30 மணிக்கு

எதிரிகளுக்கு ஆய்வு நமுனா தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கண்ணன் மற்றும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு தாங்கள் உதவியாக இருந்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அசா.3 திரு.ஜாக்குலின் தனது சாட்சியத்தில் கடந்த 27.05.2022–ம் தேதி தான் ராமநாதபுரம் மாவட்டம் போதைபொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ரகசிய தகவலாளி தன்னை தொடர்பு கொண்டு ராமநாதபுரம் D Block பாழடைந்த கட்டிடம் அருகே 1) கண்ணன், த/பெ.ராஜேந்திரன் ராமநாதபுரம். 2)முத்துமுருகன், த/பெ.முனியசாமி ராமநாதபுரம் என்பவர்கள் வைத்து கஞ்சா மறைத்து வைத்து விற்பனை செய்து வருவதாகவும் வந்தால் கையும் காலுமாக பிடிக்கலாம் என்ற தகவலை பெற்று பொது நாட்குறிப்பில் பதிவு செய்து ராமநாதபுரம் NIB-CID துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு எழுத்து மூலமாக முன் தகவலை தெரிவித்தும் அவரிடம் அனுமதி பெற்றும் தனது தலைமையில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.கண்ணன், குமார் ஆகியோர்களுடன் வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் 14.50 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு தகவலாளி சொன்ன ராமநாதபுரம் D Block பாழடைந்த கட்டிடம் அருகே 15.00 மணிக்கு போய் சேர்ந்து மறைந்திருந்து கண்காணித்து கொண்டிருந்ததோம் என்றும், அப்போது அங்கு இரண்டு நபர்கள் வந்தார்கள் என்றும், அப்போது தாங்கள் அவரை போலீஸ் பார்ட்டி சகிதம் பிடிக்க முற்பட்டபோது தப்பி ஓடி எத்தனித்தார் என்றும், அவரை நாங்கள் மடக்கி பிடித்தோம் என்றும், அவரிடம் தங்களது அடையாள அட்டையை காண்பித்து தாங்கள் ராமநாதபுரம் NIB-CID போலீசார் என்று அறிமுகம் செய்து கொண்டடோம் என்றும், அவரிடம் பெயர் விலாசம் கேட்டபோது தகலாளி சொன்னபடி 1) கண்ணன், த/பெ.ராஜேந்திரன்

ராமநாதபுரம். 2) முத்துமுருகன், த/பெ.முனியசாமி ராமநாதபுரம் என பெயர் விலாசம் சரியாக இருந்தது என்றும், அவரிடம் தங்களுக்கு வந்த தகவலை எடுத்துக் கூறி போதை பொருளான கஞ்சா இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதால் உம்மை சோதனை செய்ய வேண்டும் என்றும், அவரை சோதனை செய்ய அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்பாகவோ சோதனை செய்ய சொல்ல எதிரிகளுக்குள்ள உரிமையை எதிரிகளுக்கு எடுத்து கூறினேன் என்றும், அதற்கு எதிரிகள் தாங்களே சோதனை செய்யலாம் என விருப்பம் தெரிவித்தார்கள் என்றும், அதன்படி 15.10 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தானே தயார் செய்தேன் என்றும், எதிரிகள் மற்றும் சாட்சிகளான பெரியகருப்பன், கண்ணன், குமார் ஆகியோர்களிடம் சோதனை சம்மத கடிதத்தில் கையொப்பம் பெற்றேன் என்றும், அதில் தானும் கையொப்பம் செய்தேன் என்றும், பின்னர் எதிரி முத்துக்குமார் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையில் 1.200 கிகி கஞ்சா இருந்தது என்றும், 2–வது எதிரி கண்ணன் என்பவரை விசாரணை செய்தபோது 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதை வாங்கி சோதனை செய்தபோது என்ன உள்ளது என தாங்கள் சோதனை செய்தோம் என்றும், அதில் இலை, பூ, காம்பு, மொட்டுடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், ஆகவே எதிரிகள் கஞ்சா வைத்திருந்த காரணத்திற்காக எதிரிகளை கைதிற்கான காரணம் கூறி 15.40 மணிக்கு அவரை கைது செய்தோம் என்றும், பின்னர் 17.00 மணிக்கு சாட்சிகளான பெரியகருப்பன், கண்ணன், குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து எதிரிகள் வைத்திருந்த தடய சொத்தினை கைப்பற்றினேன் என்றும், பின்னர் எதிரிகள் கண்ணன், முத்துமுருகன் அவர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளான பெரியகருப்பன், கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் 17.00 மணிக்கு எதிரிகள் சொல்ல சொல்ல பதிவு செய்தேன் என்றும், அதற்கான எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகளியிடமும் சாட்சிகளான பெரியகருப்பன், கண்ணன்,

குமார் ஆகியோர்களிடமும் கையொப்பம் பெற்றேன் என்றும், பின்னர் எதிரிகள் மற்றும் தடயங்களுடன் 18.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 11/2022 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) 25, 29(1) of NDPS Act–ன்படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், அதற்கான முதல் தகவல் அறிக்கை அதசாஆ.8 என்றும், பின்னர் எதிரிகளை நிலைய பாரா வசம் ஒப்படைத்தும் நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தேன் என்றும், பின்னர் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய சொத்தினை படிவம் எண்.95 ன்படி நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றும், அதற்கான படிவம் 95 அதசாஆ.9 என்றும், பின்பு பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட மாதிரியை நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஆர்பி எண்.272/2022 பெற்று ரசாயண பகுப்பாய்விற்கு அனுப்பி ஆய்வு அறிக்கை பெற்று அந்த ஆய்வு அறிக்கையின்படி எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது கஞ்சா என்பது தெரிய வந்தது என்றும், வழக்கு சொத்தினை ராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்பாக ஆஜர்படுத்தியும் Inventory எடுத்தும் தடய சொத்தினை 8 புகைப்படங்கள் ராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்பாக எடுக்கப்பட்டும் உள்ளது என்றும், அதற்கான Annexure I அதசாஆ.10 என்றும், அதற்கான Annexure II அதசாஆ.11 என்றும், தடய சொத்தினை ராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்பாக எடுக்கப்பட்ட புகைப்படம் 8 அதசாஆ.12 வரிசையாக உள்ளது என்றும், ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையில் தான் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியது கஞ்சா என தெரிய வந்தது என்றும், அதற்கான பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.13 என்றும், பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்ட மீதமுள்ள மொத்த கஞ்சா மற்றும் கஞ்சாவை இந்நீதிமன்றத்தின் மூலம் உரிய உத்தரவு பெற்று Drugs Disposal Committee மூலம் அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான அழிப்பு உத்தரவு Crlmp No.4271/2024 Dt.08/08/2024 உத்தரவு அதசாஆ.14 என்றும், எதிரிகளை கைது செய்தபோது உரிய காரணம் கூறி தான் கொடுத்த கைது குறிப்பாணை

முறையே அதசாஆ.15, 16 என்றும், ஆகவே சாட்சிகளை விசாரித்தும் வழக்கு சம்பவம் உண்மை என தனது புலன் விசாரணையில் தெரிய வந்ததால் எதிரிகள் மீது கடந்த 26.08.2022–ம் தேதி அன்று இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரிகள் அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார்கள். எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B),25,29(1) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01 ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரிகள் மீதான u/s 8(c) r/w 20(b) (ii)(B) ,25,29(1) of NDPS Act 1985–ன்படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே

எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரிகளை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக திரு. கண்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1 மூலமாக அசாஆ 1 முதல் 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக திரு. பெரியகருப்பன், சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார், அசா3 ஆக திருமதி. ஜாக்குலின், காவல் ஆய்வாளர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 8 முதல் அசாஆ 16 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள திரு.கண்ணன் தனது சாட்சியத்தில் ராமநாதபுரம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்தபோது 27.05.2022-ம் தேதி 14.15 மணிக்கு தான் அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஜாக்குலின் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.1251 திரு.குமார் ஆகியோர்களுடன் காவல் ஆய்வாளருக்கு உதவியாக வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும்

உபகரணங்களை எடுத்து கொண்டு 14.30 மணிக்கு நிலையத்தை விட்டு கிளம்பி 14.50 மணிக்கு தகவலாளி சொன்ன இடமான ராமநாதபுரம் டி பிளாக் பால் அடைந்த கட்டிடம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை தகவலாளி அடையாளம் காட்டி மறைய தாங்கள் அவரை பிடிக்க முயலும்போது இருசக்கரத்தை நிறுத்தி விட்டு ஓட எத்தணித்தவரை சுற்றி வளைத்து பிடித்து தாங்கள் NIB CID போலீசார் என அடையாளம் காண்பித்து அறிமுகம் செய்து கொண்டதாகவும், பின்பு அவரது பெயர் முகவரி கேட்க அதில் முதல் நபர் தனது பெயர் கண்ணன், ஓம் சக்தி நகர், ராமநாதபுரம் என்று கூறினார், மற்றொரு நபர் முத்து முருகன், எம்எஸ் கே நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும் ஆய்வாளர் அவர்களிடம் தனக்கு வந்த தகவல் குறித்து எடுத்து கூறியும் அவர்களை சோதனை செய்ய வேண்டி அது வகைக்கு அவர்களை அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய எதிரிகளுக்கு உள்ள உரிமையை ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறினார் என்றும், அதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் தங்களை வேறு எங்கும் கூட்டி செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள் என்றும், அதன்படி 15.10 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரிய கருப்பனும், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 1–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும்

சோதனை சம்மத கடிதம் என்றும், அதில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 என்றும் 15.30 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு.கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பெரியகருப்பனும், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 2-வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், அதில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.2 என்றும், முன்வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் இவ்வழக்கின் சோதனை அதிகாரியான திருமதி. ஜாக்குலின் காவல் ஆய்வாளர் தான் NDPS சட்டப்பிரிவு 50-ன் படி எதிரிகளுக்கு சோதனை சம்மத கடிதம் கொடுத்தும் சோதனை செய்துள்ளது தெரியவருகிறது.

13. மேலும், அசா1 தன்னுடைய சாட்சியத்தில் 15.30 மணிக்கு திரு.கண்ணன் என்பவர் டி பிளாக் பாழ் அடைந்த கட்டிடத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளை நிற சாக்கு பையை ஆய்வாளரிடம் ஆஜர் படுத்தினார் என்றும், அதனை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதை 15.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சாவை கைப்பற்றி அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், 1-வது எதிரிக்கு தயார்

செய்த அத்தாட்சி என்றும், அந்த அத்தாட்சி அதசாஆ.3 என்றும், 2–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், அந்த அத்தாட்சி அதசாஆ.4 என்றும், எதிரியை ஆஜர்படுத்திய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு 50 கி வீதம் இரண்டு சாம்பில் எடுத்து அதில் SHO சீல் வைத்தும், மீதமுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து பின்பு 16.30 மணி முதல் 16.50 மணி வரை 1–வது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பனும், த.கா.குமாரும் கையெழுத்து செய்தோம் என்றும், தற்போது தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது கையெழுத்து மட்டும் அதசாஆ.5 என்றும், பின்பு 17.00 மணிக்கு 2–வது எதிரியை ஆஜர் படுத்திய கஞ்சாவை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.200 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதற்கு P2 என குறியீடு செய்யப்பட்டு எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் கஞ்சாவையும் அத்தாட்சியில் கைப்பற்றி பின்பு 15.30 மணிக்கு எதிரிகளுக்கு ஆய்வு நமுனா தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன் மற்றும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், 1–வது எதிரி கண்ணனுக்கு அந்த ஆய்வு நமுனா அதசாஆ.6 என்றும், 2–வது எதிரி முத்துமுருகனுக்கு ஆய்வு செய்த அந்த ஆய்வு நமுனா அதசாஆ.7 என்றும் சாட்சியம் முன் வைத்துள்ளதை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா1–ன் முன்னிலையில் இவ்வழக்கின்

எதிரிகளிடமிருந்து காவல் ஆய்வாளர் திருமதி. ஜாக்குலின் 3.300 கிகி கஞ்சாவை கையும் மெய்யுமாக கைப்பற்றியுள்ளது தெரியவருகிறது.

14. மேலும், அசா.2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள திரு.பெரியகருப்பன் தனது சாட்சியத்தில் தான் தற்போது இராமநாதபுரம் NIB CID காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ராமநாதபுரம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் பணிபுரிந்தபோது 27.05.2022–ம் தேதி 14.15 மணிக்கு தான் அலுவலில் இருந்தபோது காவல் ஆய்வாளர் ஜாக்குலின் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி தானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.1251 திரு.குமார் ஆகியோர்களுடன் காவல் ஆய்வாளருக்கு உதவியாக வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்து கொண்டு 14.30 மணிக்கு நிலையத்தை விட்டு கிளம்பி 14.50 மணிக்கு தகவலாளி சொன்ன இடமான ராமநாதபுரம் டி பிளாக் பால் அடைந்த கட்டிடம் அருகில் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை தகவலாளி அடையாளம் காட்டி மறைய நாங்கள் அவரை பிடிக்க முயலும்போது இருசக்கரத்தை நிறுத்தி விட்டு ஓட எத்தணித்தவரை சுற்றி வளைத்து பிடித்து தாங்கள் NIB – CID போலீசார் என அடையாளம் காண்பித்து அறிமுகம் செய்து கொண்டோம் என்றும், பின்பு அவரது பெயர் முகவரி கேட்க அதில் முதல் நபர் தனது பெயர் கண்ணன், ஓம் சக்தி நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும், மற்றொரு நபர் முத்து முருகன், எம்எஸ் கே நகர், ராமநாதபுரம் என்று கூறினார் என்றும், தகவலாளி சொன்ன முகவரி சரியாக இருந்ததால் 15.00 மணிக்கு மேற்படி இரண்டு நபர்களிடமும் அவர்கள் கஞ்சா வைத்திருப்பதாக ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறியும் அவர்களை சோதனை செய்ய வேண்டி அது வகைக்கு அவர்களை அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ அழைத்து சென்று சோதனை செய்ய

எதிரிகளுக்கு உள்ள உரிமையை ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கூறினார் என்றும், அதற்கு அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்றும் தங்களை வேறு எங்கும் கூட்டி செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள் என்றும், அதன்படி 15.10 மணிக்கு காவல் ஆய்வாளர், கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 1–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், அதில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதன்படி 15.30 மணிக்கு காவல் ஆய்வாளர், கண்ணன் என்பவருக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து சார்பு செய்தார் என்றும், அதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு இல்லை என்பதால் தானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கைது செய்துள்ளோம் என்றும், 2–வது எதிரிக்கு சார்பு செய்த சோதனை சம்மத கடிதம் தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் என்றும், உள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பின்பு 15.30 மணிக்கு திரு.கண்ணன் என்பவர் டி பிளாக் பாழ் அடைந்த கட்டிடத்திலிருந்து கொண்டு வந்த வெள்ளை நிற சாக்கு பையை ஆஜர் படுத்தினார் என்றும், அதில் தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் 2.100 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதை 15.40 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் அவர்கள் கஞ்சாவை கைப்பற்றி அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், 1–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், 2–வது எதிரிக்கு தயார் செய்த அத்தாட்சி என்றும், எதிரி ஆஜர்படுத்திய கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்கு 50 கி வீதம் இரண்டு சாம்பில் எடுத்து அதில் SHO சீல் வைத்தும்,

மீதமுள்ள கஞ்சாவை அதே பையில் வைத்து பின்பு 16.30 மணி முதல் 16.50 மணி வரை 1–வது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கண்ணன், த.கா.குமாரும் கையெழுத்து செய்தோம் என்றும், தற்போது தன்னிடத்தில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1–வது கையெழுத்து மட்டும் அதசாஆ.8 என்றும், பின்பு 17.00 மணிக்கு 2–வது எதிரியை ஆஜர் படுத்திய கஞ்சாவை தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.200 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதற்கு P2 என குறியீடு செய்யப்பட்டு எதிரிகள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் கஞ்சாவையும் அத்தாட்சியில் கைப்பற்றி பின்பு 15.30 மணிக்கு எதிரிகளுக்கு ஆய்வு நமுனா தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கண்ணன் மற்றும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் அசா2 , அசா1–ன் சாட்சியத்திற்கு ஒத்துரைப்பாக நடந்த சோதனை குறித்து குறிப்பிட்டும் இவ்வழக்கின் எதிரிகளை வழக்கின் குற்றச்சாட்டுடன் பிணைக்கும் வகைக்கு குற்றப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது.

15. மேலும் அசா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள திருமதி.ஜாக்குலின் அதாவது Raiding and Seizing Officer தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 27.05.2022–ம் தேதி தான் ராமநாதபுரம் மாவட்டம் போதைபொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ரகசிய தகவலாளி தன்னை தொடர்பு கொண்டு ராமநாதபுரம் D Block பாழடைந்த கட்டிடம் அருகே 1) கண்ணன், த/பெ.ராஜேந்திரன் ராமநாதபுரம். 2)முத்துமுருகன், த/பெ.முனியசாமி ராமநாதபுரம் என்பவர்கள் வைத்து கஞ்சா மறைத்து வைத்து

விற்பனை செய்து வருவதாகவும் வந்தால் கையும் காலுமாக பிடிக்கலாம் என்ற தகவலை பெற்று பொது நாட்குறிப்பில் பதிவு செய்து ராமநாதபுரம் **NIB-CID** துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு எழுத்து மூலமாக முன் தகவலை தெரிவித்தும் அவரிடம் அனுமதி பெற்றும் தனது தலைமையில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பெரியகருப்பன், த.கா.கண்ணன், குமார் ஆகியோர்களுடன் வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் 14.50 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு தகவலாளி சொன்ன ராமநாதபுரம் D Block பாழடைந்த கட்டிடம் அருகே 15.00 மணிக்கு போய் சேர்ந்து மறைந்திருந்து கண்காணித்து கொண்டிருந்ததோம் என்றும், அப்போது அங்கு இரண்டு நபர்கள் வந்தார்கள் என்றும், அப்போது தாங்கள் அவரை போலீஸ் பார்ட்டி சகிதம் பிடிக்க முற்பட்டபோது தப்பி ஓடி எத்தனித்தார் என்றும், அவரை நாங்கள் மடக்கி பிடித்தோம் என்றும், அவரிடம் தங்களது அடையாள அட்டையை காண்பித்து தாங்கள் ராமநாதபுரம் **NIB-CID** போலீசார் என்று அறிமுகம் செய்து கொண்டடோம் என்றும், அவரிடம் பெயர் விலாசம் கேட்டபோது தகலாளி சொன்னபடி 1) கண்ணன், த/பெ.ராஜேந்திரன் ராமநாதபுரம். 2) முத்துமுருகன், த/பெ.முனியசாமி ராமநாதபுரம் என பெயர் விலாசம் சரியாக இருந்தது என்றும், அவரிடம் தங்களுக்கு வந்த தகவலை எடுத்துக் கூறி போதை பொருளான கஞ்சா இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதால் உம்மை சோதனை செய்ய வேண்டும் என்றும், அவரை சோதனை செய்ய அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்பாகவோ சோதனை செய்ய சொல்ல எதிரிகளுக்குள்ள உரிமையை எதிரிகளுக்கு எடுத்து கூறினேன் என்றும், அதற்கு எதிரிகள் தாங்களே சோதனை செய்யலாம் என விருப்பம் தெரிவித்தார்கள் என்றும், அதன்படி 15.10 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தானே தயார் செய்தேன் என்றும், எதிரிகள் மற்றும் சாட்சிகளான பெரியகருப்பன், கண்ணன், குமார் ஆகியோர்களிடம் சோதனை சம்மத கடிதத்தில் கையொப்பம் பெற்றேன் என்றும், அதில் தானும் கையொப்பம் செய்தேன் என்றும் சாட்சியம் முன்வைத்துள்ளதை மிக கவனமாக

பரிசீலிக்கையில் அசா1 மற்றும் அசா2-ன் முன்னிலையில் அசா3 பிடித்தும், சோதனை செய்தும் எதிரிகளிடமிருந்து 3.300 கிகி கஞ்சாவை கையும் மெய்யுமாக கைப்பற்றியுள்ளது அரசு தரப்பில் அசா 1 முதல் அசா3-ன் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ16 வரையிலான சான்றாவணங்கள் அடிப்படையில் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

16. இந்நிலையில், அசா3 தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கில் கண்ட இருசக்கர வாகனம் குறித்து அதனை குறிப்பிட்டு இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை தெரிவித்து ஒன்றும் சாட்சியம் முன்வைத்திருக்கவில்லை. அதுவகைக்கு அசா3 திருமதி. ஜாக்குலின் காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் கண்ட இருசக்கர வாகனம் யாருக்கு உரிமையானது என்பது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கவில்லை. அவ்வாறு மோட்டார் வாகன அலுவலர் யாரையும் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. இதுகுறித்து அசா1 கண்ணன் தன்னுடைய சாட்சியத்தில் எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் குறித்து அதன் பதிவு எண் மற்றும் வாகனத்தின் பிராண்ட் பெயர் எதையும் குறிப்பிட்டு சாட்சியம் முன்வைத்திருக்கவில்லை.

17. மேலும், அசா2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் பெரியகருப்பன் எதிரிகள் வழக்கு சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருக்கவில்லை. இந்நிலையில், அந்த இருசக்கர வாகனத்தினை குறித்து அரசு தரப்பில் அதன் பதிவு சான்றிதழை தாக்கல் செய்யாமலும் உள்ளதால் எதிரிகள் மீதான NDPS சட்டப்பிரிவு 25-ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டிருக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. மேலும் இவ்வழக்கில் கண்ட எதிரிகள் இருவரும் எவ்வகையில் ஒருவருக்கொருவர் தொடர்பில் கஞ்சா விற்பனையில் கூட்டு சதி செய்து திட்டமிட்டு குற்ற செயல்களில் ஈடுபட்டார் என இடம் மற்றும் நேரம் , காலம் , மணி , தேதி குறித்து அரசு தரப்பில் அசா1 முதல் அசா3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தில் விபரம் ஒன்றும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அரசு தரப்பில் இவ்வழக்கின் எதிரிகள் மீதான NDPS சட்டப்பிரிவு 29(1)ன் படியான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மேற்கண்ட குற்றச்சாட்டினை மெய்பிக்கும் வகையில் போதுமான ஒன்றாக இருக்கவில்லை.

19. மேலும், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54—ன் பிரகாரம் எதிரிகள் சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் எதிரிகள் 3.300 கிகி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்தும் குற்ற செய்கையில் ஈடுபட்டு உள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் எதிரிகளால் முன்னிடப்பட்டிருக்கவில்லை.

20. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகள் NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985—

ன்கீழான குற்றத்திற்கு தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் ,இவ்வழக்கின் எதிரிகள் NDPS சட்டப்பிரிவு 25,29(1) r/w 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழான குற்றத்திற்கு தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. ஆகவே எதிரிகள் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என்று முடிவு செய்து, எதிரிகளுக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரிகளிடம் வினவ, எதிரிகள் கீழ்கண்டவாறு கூறினார்கள்.

| |
|---|
| 1) எனது வயது 49 ஆகும். என்னை மன்னிக்க வேண்டும். |
| 2) எனது வயது 36 ஆகும். என்னை மன்னிக்க வேண்டும். |

ஆகவே, எதிரிகளின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2023–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும், எதிரிகள் தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார்கள் என்பதாலும் எதிரிகளின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிகளுக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

22. முடிவாக,

1,2 வது எதிரிகள் ச/பி 25, 29(1) r/w 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985 ன் கீழான குற்றத்திற்கு குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்தும் குவிமுச 235(1)/258 BNSS Act ன் கீழ் விடுதலை செய்தும் ,

1 வது எதிரி 1985-ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9-01 ச-பி 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985 -ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 28 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/- விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும்,

2 வது எதிரி 1985-ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9-01 ச-பி 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985 -ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் எதிரிக்கு 28 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/- விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும்,

1,2 வது எதிரிகள் ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428 ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

1 வது எதிரி 27.05.2022 முதல் 23.06.2022 வரை சிறையில் இருந்துவந்துள்ளார்.

2 வது எதிரி 27.05.2022 முதல் 23.06.2022 வரை சிறையில் இருந்துவந்துள்ளார்.

1 வது எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– ஆகும்.

2 வது எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– ஆகும்.

23. இவ்வழக்கில் ஆர்பிஎண்.272/2022–ல் குறியீடு செய்யப்படாத கஞ்சாவை பொறுத்து இந்நீதிமன்ற சிஆர்எம்பி.4271/2024 நாள் 08.08.2024–ம் தேதியன்று ஏற்பட்ட உத்தரவின்படிக்கு அழித்திருப்பின், அழித்தது போக மீதமுள்ள கஞ்சா இருப்பின் அதனை இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் TN 65 AL 3636 என்ற பதிவெண்ட கொண்ட Bajaj Pulsar 150 இருசக்கர வாகனத்தை பொறுத்து மனுதாரர் இடைகால பிணையில் பெற்றுச்சென்றுள்ளதால் அவரே வைத்துக்கொள்ளவும் அவர் எழுதி கொடுத்த பிணை முறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 31–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.07.31 16:11:26 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**<u>சாட்சி பட்டியல்–</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>**

அ.சா.1 – திரு.கண்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர்.

அ.சா.2 – திரு.பெரியகருப்பன், சிறப்பு சார்பு ஆய்வாளர்.

அ.சா.3 – திருமதி.ஜாக்குலின், காவல் ஆய்வாளர்.

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

அ.சா.ஆ.1 – சோதனை சம்மத கடிதம்
அ.சா.ஆ.2 – சோதனை சம்மத கடிதம்
அ.சா.ஆ.3 – அத்தாட்சி
அ.சா.ஆ.4 – அத்தாட்சி
அ.சா.ஆ.5 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது கையொப்பம்
அ.சா.ஆ.6 – ஆய்வு நமுனா
அ.சா.ஆ.7 – ஆய்வு நமுனா
அ.சா.ஆ.8 – முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.9 – படிவம் 95
அ.சா.ஆ.10 – Annexure – I
அ.சா.ஆ.11– Annexure – II
அ.சா.ஆ.12 – புகைப்படங்கள் எண்ணிக்கை – 8
அ.சா.ஆ.13 – பகுப்பாய்வு அறிக்கை
அ.சா.ஆ.14 – CrlMp No.4271/2024 Dt.08.08.2024–ம் தேதிய அழித்தல் உத்தரவு
அ.சா.ஆ.15 – கைது குறிப்பாணை
அ.சா.ஆ.16 – கைது குறிப்பாணை

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u>** – இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்</u>**–

**இல்லை.**

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.07.31 16:11:35 +0530

**தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்**
**அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.**

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருக்கிறார்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. எதிரிகளுக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.79/2023
Dt.31.07.2026.